**இலங்கை வங்கி - 2015**
-----------------------------------------
இலங்கை வங்கியினதும் (''வங்கி'') இலங்கை வங்கி மற்றும் அதனது துணைக் கம்பனிகளினதும் (தொகுதி) 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்றுக்கள் மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான இலாபநட்டக் கூற்றுக்கள், விரிவான வருமானக் கூற்றுக்கள், உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்றுக்கள், காசுப்பாய்ச்சல் கூற்றுக்கள் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களும் ஒன்றிணைந்த நிதிக்கூற்றுக்களும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. இக் கணக்காய்வை மேற்கொள்வதற்கு பொதுத் தொழிலுள்ள பட்டயக் கணக்காளர்கள் நிறுவனமொன்று எனக்கு உதவியது. துணைக் கம்பனிகளின் நிதிக்கூற்றுக்கள் குறித்த துணைக் கம்பனிகளின் அங்கத்தவர்களால் நியமிக்கப்பட்ட பொதுத் தொழிலுள்ள பட்டயக் கணக்காளர்கள் நிறுவனங்களால் கணக்காய்வு செய்யப்பட்டன.

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் பிரகாரம் இந்த அறிக்கை வழங்கப்பட்டுள்ளது.

**1.2 வங்கிக்கான விசேட நியதிச்சட்ட ஏற்பாடுகள்**
-------------------------------------------------------------------------------
1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 5(1) ஆம் பிரிவினால் முன்னைய நிதி அமைச்சருக்கு வழங்கப்பட்டிருந்த அதிகாரங்களின் பிரகாரம் 1992 மே 14 இன் 715 ஆம் இலக்க அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட அவரின் கட்டளைக்கமைய மேற்குறிப்பிட்ட நிதி அதிகாரச்சட்டத்தின் II ஆம் பகுதியிலுள்ள ஏற்பாடுகளிலிருந்து வங்கி விலக்களிக்கப்பட்டிருந்தது. அமைச்சரவையினால் தீர்மானிக்கப்பட்டு 1992 ஏப்ரல் 10 ஆந் திகதிய ஈஏ02/பீசீ/பிபீ/01 ஆம் இலக்க திறைசேரிச் செயலாளரின் சுற்றறிக்கையின் மூலம் அவரால் அறிவிக்கப்பட்டவாறு வங்கியானது சகல திறைசேரி மற்றும் பொது நிர்வாகச் சுற்றறிக்கைகளிலிருந்தும் விலக்களிக்கப்பட்டுள்ளது.

**1.3 நிதிக்கூற்றுக்களுக்கான சபையின் பொறுப்பு**
-----------------------------------------------------------------
இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென சபை நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு பணிப்பாளர் சபை (''சபை'') பொறுப்பாக உள்ளது.

**1.4 கணக்காய்வாளரின் பொறுப்பு**
--------------------------------------------------
எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் வங்கியின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில்

கொள்கின்றாரேயன்றி வங்கியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. சபையினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் சபையால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

வங்கியினதும் தொகுதியினதும் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சல்களினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 தொகுதியின் நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 தொகுதியின் நிதிக்கூற்றுக்களும் ஒன்றிணைப்புக்கான அடிப்படையும்

வங்கியின் ஒருங்கிணைந்த பகுதியாகவுள்ள உள்நாட்டு வங்கிப் பிரிவு, கரை கடந்த வங்கிப் பிரிவு, இஸ்லாமிய வங்கிப் பிரிவு மற்றும் வெளிநாட்டுச் செயற்பாடுகள் என்பவற்றின் நிதிக்கூற்றுக்களின் ஒன்றிணைப்பை வங்கியின் நிதிக்கூற்றுக்கள் உள்ளடக்கியுள்ளன. இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் (எஸ்எல்எவ்ஆர்எஸ்/ எல்கேஏஎஸ்) இணங்கியவாறான வங்கி, அதன் துணைக் கம்பனிகள் மற்றும் உப கம்பனிகள் என்பவற்றின் நிதிக்கூற்றுக்களின் ஒன்றிணைப்பை தொகுதியின் நிதிக்கூற்றுக்கள் உள்ளடக்கியுள்ளன.

ஒவ்வொரு துணைக்கம்பனியிலும் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறும் முன்னைய ஆண்டின் இறுதியில் உள்ளவாறும் வங்கியின் முதலீட்டு நிலைமை கீழே தரப்பட்டுள்ளன.

| **கம்பனியின் பெயர்** | **முதலீட்டு நிலைமை** | | **முதலீட்டின் சதவீதமாக உரிமைத்துவம்** | |
|---|---|---|---|---|
| | **2015 ரூபா மில்லியன்** | **2014 ரூபா மில்லியன்** | **2015** | **2014** |
| **துணைக் கம்பனிகள்** | | | | |
| - **விலைகூறப்பட்ட கம்பனிகள்** | | | | |
| ஆதன அபிவிருத்தி கம்பனி பிஎல்சீ | 860 | 860 | 95.55 | 95.55 |
| இலங்கை வியாபார வங்கி மற்றும் நிதி பிஎல்சீ | 2,255 | 2,123 | 74.49 | 72.14 |
| - **விலைகூறப்படாத கம்பனிகள்** | | | | |
| வரையறுக்கப்பட்ட பீஓசி முகாமைத்துவ மற்றும் ஆதாரச் சேவைகள் (தனியார்) கம்பனி | 1 | 1 | 100.00 | 100.00 |

| | | | | |
|---|---|---|---|---|
| வரையறுக்கப்பட்ட பீஓசி ஆதன அபிவிருத்தி மற்றும் முகாமைத்துவக் (தனியார்) கம்பனி | 1,010 | 1,010 | 100.00 | 100.00 |
| வரையறுக்கப்பட்ட பீஓசி டிரவல்ஸ் (தனியார்) கம்பனி | 2.5 | 2.5 | 100.00 | 100.00 |
| வரையறுக்கப்பட்ட ஹொட்டேல்ஸ் கொழும்பு (1963) கம்பனி | 101 | 101 | 99.99 | 99.99 |
| வரையறுக்கப்பட்ட இலங்கை வியாபார கடன் நிதிச் சேவைகள் கம்பனி | - | 132 | - | 80.09 |
| வரையறுக்கப்பட்ட இலங்கை வங்கி (ஐக்கிய இராச்சியம்) | 2,684 | 2,684 | 100.00 | 100.00 |
| **துணைக் கம்பனிகளில் மொத்த முதலீடுகள்** | **6,913** | **6,913** | | |
| கழி - நட்டக்கழிவுக்கான ஏற்பாடு | (700) | (700) | | |
| **துணைக் கம்பனிகளில் தேறிய முதலீடுகள்** | **6,213** | **6,213** | | |
| **உப கம்பனிகள்** | | | | |
| - **விலைகூறப்படாத கம்பனிகள்** | | | | |
| வரையறுக்கப்பட்ட ரிரான்ஸ்நெஷனல் லங்கா றெகோர்ட்ஸ் சொலுசன்ஸ் *(தனியார்)* கம்பனி | 20 | 20 | 24.69 | 24.69 |
| வரையறுக்கப்பட்ட சீபாங் சொத்து முகாமைத்துவக் (தனியார்) கம்பனி | 31 | 31 | 43.36 | 43.36 |
| வரையறுக்கப்பட்ட தெற்கு அபிவிருத்தி நிதிக் கம்பனி | 25 | 25 | 41.67 | 41.67 |
| வரையறுக்கப்பட்ட மிரேகா கெபிடல் லான்ட் (தனியார்) கம்பனி | 750 | 750 | 40.00 | 40.00 |
| வரையறுக்கப்பட்ட லங்கா பிணையங்கள் (தனியார்) கம்பனி | 42 | 42 | 41.60 | 40.92 |
| **உப கம்பனிகளில் மொத்த முதலீடுகள்** | **868** | **868** | | |
| கழி - நட்டக்கழிவுக்கான ஏற்பாடு | (25) | (25) | | |
| **உப கம்பனிகளில் தேறிய முதலீடுகள்** | **843** | **843** | | |
| **மொத்த முதலீடுகள்** | **7,056** | **7,056** | | |

****** வரையறுக்கப்பட்ட இலங்கை வியாபார கடன் நிதிச் சேவைகள் கம்பனி மற்றும் வரையறுக்கப்பட்ட இலங்கை வியாபார சேமிப்பு வங்கி என்பன 2015 சனவரி 01 இலிருந்து வரையறுக்கப்பட்ட இலங்கை வியாபார வங்கி மற்றும் நிதிக் கம்பனியுடன் ஒன்றிணைக்கப்பட்டிருந்தன.

**2.3 வங்கியின் நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.3.1 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடனான இணக்கம் (எஸ்எல்எவ்ஆர்எஸ் மற்றும் எல்கேஏஎஸ்)**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) எல்கேஏஎஸ் 39 – நிதிக் கருவிகள், அங்கீகாரம் மற்றும் அளவீடு** - நட்டக் கடன்கள் மீதான வட்டி வருமானம் தாக்கமுள்ள வட்டி வீதத்தில் அங்கீகரிக்கப்படுதல் வேண்டும். எவ்வாறாயினும், நியமத்தில் வேண்டப்பட்டவாறு நட்டக் கடன்கள் மீதான வருமானத்தை வங்கி அங்கீகரித்திருக்கவில்லை. மேலும், வழமையாக, இலங்கை மத்திய வங்கியினால் (சீபீஎஸ்எல்) வழங்கப்பட்ட நெறிப்படுத்தல்களின் பிரகாரம் செயற்பாடற்ற கடன்கள் மீதான வட்டி வருமானத்தை வங்கி தொடர்ச்சியாக இடைநிறுத்தி வைத்திருந்தமையால் நிதிக்கூற்றுக்களின் இணக்கப்பாட்டுக்கான சீராக்கமாக இடைநிறுத்தி வைத்திருந்த வருமானம், வட்டி வருமானத்துடனும் கடன்களுடனும் சேர்க்கப்பட்டிருந்தது.

**(ஆ) எல்கேஏஎஸ் 24 – தொடர்புடைய தரப்பினர் வெளிப்படுத்தல்கள் -** 2009 இலிருந்து வரையறுக்கப்பட்ட தனியார் கம்பனியின் பிரதம நிறைவேற்று அலுவலராக (சீஈஓ) வங்கியின் சுயாதீன மற்றும் நிறைவேற்றுநரல்லாத பணிப்பாளர் கடமையாற்றிக்கொண்டிருக்கின்ற போதிலும் 2015 திசெம்பர் 28 இல் இந்தக் கம்பனியிடமிருந்து ஐ.அ.டொலர் 40,000 கிரயத்தில் சிமன்ரெக் என்ட்பொயின்ற் வைரஸ் பாதுகாப்பு மென்பொருளை (5000 லைசன்ஸ்கள்) வங்கி கொள்வனவு செய்திருந்தது.

எவ்வாறாயினும், மீளாய்வாண்டிற்கான வங்கியின் நிதிக்கூற்றுக்களில் குறிப்பொன்றாக இந்தக் கொடுக்கல்வாங்கல் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**2.3.2 கணக்கிணக்கம் செய்யப்படாத மற்றும் இனங்காணப்படாத வேறுபாடுகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டுள்ள தொடர்புடைய தரப்புக் கொடுக்கல்வாங்கல்களிற்கும் இலங்கை மத்திய வங்கியினால் (சீபீஎஸ்எல்) வழங்கப்பட்ட அறிக்கையில் வெளிப்படுத்தப்பட்ட மீதிகளுக்குமிடையில் ரூபா 3.5 மில்லியன் வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது.

(ஆ) 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கணக்கிணக்கம் செய்யப்படாத மீதிகளாக மத்திய வங்கியின் கணக்கிணக்கத்தில் பின்வரும் இணக்கப்பாட்டு விடயங்கள் தோன்றுகின்றன.

(i) 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இணக்கம் செய்யப்படாத உட்திரும்பிய காசோலை மீதி ரூபா 134.7 மில்லியனாக இருந்தது. முகாமைத்துவ விளக்கங்களின் பிரகாரம், காசோலைத் தீர்வுச் செய்முறை தனியார் கம்பனியொன்றின் ஈடுபாட்டுடன் மேற்கொள்ளப்படுகின்றது. மேலும், அந்தக் கம்பனி காலை மற்றும் மாலை என இரண்டு அமர்வுகளாக இந்த செய்முறையை மேற்கொள்ளுகின்றது. அறிக்கையிடல் திகதியின் இறுதியில், வேறுபாடுகளானது வங்கியின் பொதுப் பேரேட்டின் (ஜிஎல்) ஊடாக ஒரே நாளில் இனங்காணப்பட முடியாத உட்திரும்பிய காசோலையின் விளைவாகும். ஆகையால், உட்திரும்பிய காசோலை அடுத்த நாள் காலையில் பொதுப் பேரேட்டில் (ஜிஎல்) தொடர்ந்து சீராக்கப்படுவதுடன் அத்தகைய மீதிகள் கணக்கிணக்கத் திகதியில் நிலுவையாக தோன்றுகின்றன.

கணக்கிணக்கத்தினைத் தயாரிப்பதற்கு முன்னர் உட்திரும்பிய காசோலைத் தொகையை வங்கி இனங்காண முடியுமென அடையாளங்காணப்பட்டது. எவ்வாறாயினும், தொடர்ந்துவரும் நாளில் வங்கியாளர் கணக்கில் உட்திரும்பிய காசோலைத் தொகையை காசாக பதிவுசெய்வதற்கு முறைமையானது வடிவமைக்கப்பட்டிருந்தது.

(ii) 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான வெளிச்சென்ற கொடுக்கலவாங்கல் சீட்டுடன் தொடர்புடைய இணக்கம்செய்யப்படாத மீதிகள் ரூபா 378 மில்லியன் தொகையானதுடன் கொடுக்கல்வாங்கல்களின் உச்ச அளவு காரணமாக ஒரே நாளில் ஜீஎல் இல் இந்த தொகைகளை வங்கி சீராக்கம் செய்திருக்கவில்லை.

### 2.3.3 பெறவேண்டிய மற்றும் கொடுக்க வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஐ.அ.டொலர் 193,640.90 கூட்டுத்தொகையான செலுத்த வேண்டிய தொகைகள் அவற்றை தீர்ப்பனவுசெய்யவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படாமல் கடந்த 5 ஆண்டுகளாக தொங்கல் கணக்கு மீதியாக காட்டப்பட்டிருந்தது. மேலும், உண்மையான உரிமையாளரின் விபரங்கள் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மொத்த நிலுவைகளில் 90 சதவீதத்தை விடக் கூடுதலானதை பிரதிபலிக்கின்ற ஐ.அ.டொலர் 3,597,279.59 தொகை 3½ ஆண்டுகளிற்கும் மேலாக அறவீடுசெய்யப்படாது நிலுவையாகவிருந்தது.

(இ) வங்கியானது ஈரான் மீது விதிக்கப்பட்ட தடைகள் காரணமாக முடிவுறுத்தப்பட்ட கணக்கு மீதிகளைப் பிரதிபலிக்கின்ற ஐ.அ.டொலர் 3,743,008.43 கூட்டுமொத்தமான தொங்கல் கணக்கிலுள்ள தொகைகள் தொடர்பில் தொடரப்படவேண்டிய நடைமுறை பற்றி மத்திய வங்கியுடன் கலந்தாலோசித்திருக்கவில்லை.

(ஈ) கோரப்படாத கொடுப்பனவுக் கட்டளைகள், தங்கநகை அடகு மிகைகள், ஏனைய பொறுப்புக்களின் கீழான செயற்பாடற்ற கணக்குகள் என்பன உள்ளடங்கிய பல நிச்சயமின்மைக்கான கணக்குகளை வங்கி பேணிவருகின்றது. 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இந்தக் கணக்கிலுள்ள மீதி ரூபா 388.9 மில்லியனாக இருந்தது. எனினும், 10 வருடங்களிற்கு மேலாக கோரப்படாமலுள்ள இந்த கோரப்படாத மீதிகளை இலங்கை மத்திய வங்கிக்கு மாற்றுவதற்காக மத்தியில் வயது அறிக்கையொன்றை பேணுவதற்கான வசதியை வங்கி கொண்டிருக்கவில்லை.

### 2.3.4 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

கணக்காய்வில் பின்வரும் சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) இலங்கை மத்திய வங்கியின் (சீபீஎஸ்எல்) 3 (6) (v) (பீ) ஆம் இலக்க நெறிப்படுத்தல் – இடர் மதிப்பீடு | துணைக் கம்பனிகளின் இடர் முகாமைத்தவத்தின் மதிப்பீடுகள் கால அடிப்படையில் நடாத்தப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) 2009 இன் 03 ஆம் இலக்க சீபீஎஸ்எல் நெறிப்படுத்தலின் 5 ஆம் பிரிவு – அந்நியச் செலாவணிக் கொடுக்கல் வாங்கல்கள் | வங்கி பின்வரும் நடைமுறைகளுடன் இணங்கியிருக்கவில்லை.<br>(i) திறைசேரி எல்லைகள் மீதான விரிவான ஒழுங்கான மீளாய்வு<br>(ii) பினகல் திறைசேரியில் எல்லைகளை இணைத்தல்<br>(iii) பினகல் வெளிநாட்டிற்கான எல்லைகள் முன்னரே கண்காணிக்கப்படவில்லை<br>(iv) செய்முறைக்காக வடிவமைக்கப்பட்ட உரிய அங்கீகார எல்லை விலக்களிப்புக்களை பெற்றுக்கொள்ளல்<br>(v) திறைசேரி நடு அலுவலகத்தால் எல்லைகள் கண்காணிக்கப்படாமை |

## 3. நிதிசார் மீளாய்வு

### 3.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், தொகுதியின் தொழிற்பாடுகள் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான ரூபா 21,431 மில்லியன் ஆன வரிக்கு முன்னரான தேறிய இலாபத்துடன் ஒப்பிடுகையில் ரூபா 25,490 மில்லியன் ஆன வரிக்கு முன்னரான தேறிய இலாபத்தை பதிவுசெய்திருந்தமையால் நிதி விளைவுகளில் ரூபா 4,059 மில்லியன் அல்லது 18.9 சதவீத முன்னேற்றமொன்றை சுட்டிக்காட்டுகின்றது. மீளாய்வாண்டின் போது துணைக் கம்பனிகள் நீங்கலான வங்கியின் தொழிற்பாடுகள் முன்னைய ஆண்டிற்கான ரூபா 20,291 மில்லியன் ஆன வரிக்கு முன்னரான தேறிய இலாபத்துடன் ஒப்பிடுகையில் ரூபா 25,279 மில்லியன் வரிக்கு முன்னரான தேறிய இலாபத்தை விளைவித்திருந்தமையால் நிதி விளைவுகளில் ரூபா 4,988 மில்லியன் அல்லது 24.6 சதவீத முன்னேற்றமொன்றை சுட்டிக்காட்டுகின்றது.

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்கான பல்வேறு கட்டங்களிலுள்ள வங்கி மற்றும் தொகுதியின் நிதி விளைவுகளின் பொழிப்பை பின்வரும் அட்டவணை தருகின்றது.

| | வங்கி | | | தொகுதி | | |
|---|---|---|---|---|---|---|
| | 2015 | 2014 | மாற்றம் | 2015 | 2014 | மாற்றம் |
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | (%) | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | (%) |
| வட்டி வருமானம் | 114,159 | 107,394 | 6.29 | 118,498 | 111,951 | 5.85 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| வட்டிச் செலவினம் | (66,419) | (68,944) | (3.66) | (68,381) | (71,197) | (3.96) |
| **தேறிய வட்டி வருமானம்** | **47,740** | **38,450** | **24.16** | **50,117** | **40,754** | **22.97** |
| **தேறிய கட்டணம் மற்றும் தரகு வருமானம்** | **7,838** | **8,100** | **(3.23)** | **8,082** | **8,324** | **(2.90)** |
| வியாபாரத்திலிருந்தான தேறிய உழைப்பு | 3,968 | 4,860 | (18.35) | 3,985 | 5,038 | (20.90) |
| நிதி முதலீடுகளிலிருந்தான தேறிய உழைப்பு | 610 | 2,881 | (78.83) | 642 | 2,900 | (77.86) |
| ஏனைய செயற்பாட்டு வருமானம் | 5,269 | 2,222 | 137.13 | 7,015 | 3,624 | 93.57 |
| **மொத்த செயற்பாட்டு வருமானம்** | **65,425** | **56,513** | **15.77** | **69,841** | **60,640** | **15.17** |
| நட்டம் (கட்டணம்) / கடன்கள் மற்றும் ஏனைய நட்டங்களிற்கான பதிவழிப்புகள் | (7,317) | (7,911) | (7.51) | (7,780) | (7,931) | (1.90) |
| **தேறிய செயற்பாட்டு வருமானம்** | **58,108** | **48,602** | **19.56** | **62,061** | **52,709** | **17.74** |
| **மொத்த செயற்பாட்டுச் செலவினம்** | **(28,013)** | **(24,260)** | **15.47** | **(31,804)** | **(27,635)** | **15.09** |
| **பெறுமதி சேர் வரிக்கு (வற்) முன்னரான செயற்பாட்டு இலாபம்** | **30,095** | **24,342** | **23.63** | **30,257** | **25,074** | **20.67** |
| நிதிச் சேவைகள் மீதான பெறுமதி சேர் வரி | (4,816) | (4,052) | 18.85 | (4,873) | (4,105) | 18.71 |
| **பெறுமதி சேர் வரிக்குப் (வற்) பின்னரான செயற்பாட்டு இலாபம்** | **25,279** | **20,290** | **24.58** | **25,384** | **20,969** | **21.05** |
| வரிக்கு முன்னர் உப கம்பனிகளின் இலாபத்தின்/ (நட்டத்தின்) பங்கு | - | - | - | 107 | 462 | 76.84 |
| **வருமான வரிக்கு முன்னரான இலாபம்** | **25,279** | **20,290** | **24.58** | **25,491** | **21,431** | **18.94** |
| வருமான வரிச் செலவினம் | (7,921) | (6,717) | 17.92 | (8,103) | (7,059) | 14.79 |
| **ஆண்டுக்கான இலாபம்** | **17,358** | **13,573** | **27.87** | **17,388** | **14,372** | **20.98** |

ரூபா 2,339 மில்லியன் அல்லது 8,530 சதவீதத்தால் ஏனைய செயற்பாட்டு வருமானத்தை உள்ளடக்கிய அந்நியச் செலாவணியின் மீள்மதிப்பீட்டின் மீதான மிகையின் அதிகரிப்பு மற்றும் ரூபா 6,765 மில்லியன் அல்லது 6.3 சதவீதத்தால் வட்டி வருமானத்தின் அதிகரிப்பு என்பன மீளாய்வாண்டிற்கான வங்கியின் நிதி விளைவுகளின் முன்னேற்றத்திற்கான பிரதான காரணங்களாக பங்களித்திருந்தன.

### 3.1.1 பெறுமதி சேர்த்தல் கூற்று

| | 2015 | 2014 |
|---|---|---|
| | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் |
| **சேர்க்கப்பட்ட பெறுமதி** | | |
| வங்கிச் சேவைகளை வழங்குவதன் மூலம் உழைக்கப்பட்ட வருமானம் | 128,078 | 118,513 |
| சேவைகளின் கிரயம் | (55,361) | (59,923) |
| **வங்கிச் சேவைகளின் மூலம் சேர்க்கப்பட்ட பெறுமதி** | **72,717** | **58,590** |
| வங்கியல்லா வருமானம் | 4,837 | 8,033 |
| கடன்கள் மற்றும் ஏனைய நட்டங்களிற்கான நட்டக் கட்டணங்கள் | (7,317) | (7,911) |
| | **70,237** | **58,712** |
| **பெறுமதி ஒதுக்கீடு** | | |
| ஊழியர்களிற்கானது | 16,744 | 13,716 |
| அரசாங்கத்திற்கானது | | |
| இலங்கை அரசாங்கத்திற்கு செலுத்தப்பட்ட பங்கிலாபங்கள் | 6,346 | 6,846 |
| மிகை இலாப வரி | 2,016 | - |
| வருமான வரி | 7,951 | 5,602 |
| பெறுமதி சேர் வரி | 4,816 | 4,052 |
| வெளி நிதிகளை வழங்குபவர்களிற்கானது | 22,008 | 19,462 |
| விரிவுபடுத்தல் மற்றும் வளர்ச்சிக்கானது | 10,356 | 9,034 |
| | **70,237** | **58,712** |

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) வங்கிச் சேவைகளால் சேர்க்கப்பட்ட பெறுமதி முன்னைய ஆண்டின் ரூபா 58,590 மில்லியனுடன் ஒப்பிடுகையில் ரூபா 72,717 மில்லியனாக 24 சதவீத வளர்ச்சியைக் காண்பிப்பதுடன் இது 2014 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் கருத்தில் கொள்ளக்கூடியளவு அதிகரித்திருந்தது.

(ஆ) ஊழியர்கள் மற்றும் வெளி நிதிகளை வழங்குபவர்களிற்கான பெறுமதி ஒதுக்கீடு 2014 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2015 ஆம் ஆண்டின் போது முறையே 22 சதவீதம் மற்றும் 13 சதவீதத்தால் அதிகரித்திருந்தன.

(இ) 2015 ஆம் ஆண்டிற்கான வரிக்குப் பின்னரான இலாபம் ரூபா 17,357 மில்லியன் தொகையானதுடன் இது 2014 இல் அறிக்கையிடப்பட்ட ரூபா 13,574 மில்லியன் ஆன வரிக்குப் பின்னரான இலாபத்துடன் ஒப்பிடுகையில் 27.9 சதவீதம் அதிகரித்திருந்தது. எனினும், அரசாங்கத்திற்கான பங்கிலாபங்களின் பகிர்ந்தளிப்பு 7 சதவீதத்தால் அல்லது 2014 ஆம் ஆண்டில் ரூபா 6,846 மில்லியனிலிருந்து 2015 ஆம் ஆண்டில் ரூபா 6,346 மில்லியனாக குறைவடைந்திருந்தது.

**3.2 பகுப்பாய்வு ரீதியான நிதிசார் மீளாய்வு**

**(அ) முக்கியமான கணக்கீட்டு விகிதங்கள்**

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஐந்து ஆண்டுகளிற்கான சில முக்கியமான கணக்கீட்டு விகிதங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | | இலங்கை மத்திய வங்கி விதிமுறைகள் | 2015 | 2014 | 2013 | 2012 | 2011 | 2010 |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | **(சதவீதம்)** | | | | | |
| (i) | மூலதனப் போதுமை விகிதம் (தட்டு 1) | 5.00 | 9.1 | 9.5 | 8.4 | 8.3 | 7.8 | 10.3 |
| (ii) | மூலதனப் போதுமை விகிதம் (தட்டு 1+2) | 10.00 | 13.1 | 13.6 | 12.1 | 11.5 | 10.9 | 13.7 |
| (iii) | சராசரி சொத்துக்கள் மீதான திரும்பல் | - | 1.7 | 1.6 | 1.4 | 2.1 | 2.1 | 1.6 |
| (iv) | திரவத்தன்மை விகிதம் | 20.00 | 28.2 | 30.8 | 27.7 | 21.8 | 23.4 | 28.7 |
| (v) | சராசரி உரிமை மீதான திரும்பல் | - | 22.2 | 20.5 | 22.2 | 31.2 | 33.5 | 24.0 |
| (vi) | வட்டி இலாப எல்லை | - | 3.3 | 3.1 | 3.3 | 3.83 | 3.34 | 3.14 |
| (vii) | வருமானத்திற்கான கிரய விகிதம் | - | 43.7 | 44.0 | 49.1 | 42.7 | 51.1 | 53.7 |

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) வங்கியின் சராசரி உரிமை மீதான திரும்பல் 2011 ஆம் ஆண்டில் 33.5 சதவீதத்திலிருந்து மீளாய்வாண்டில் 22.2 சதவீதமாக படிப்படியாக குறைவடைந்திருந்ததனால் 2011 ஆம் ஆண்டிலிருந்து வங்கி மூலதனத்தை வளமிக்கதாக முகாமை செய்வதன் மூலம் போதுமான வருமானத்தை அடைவதற்கு வங்கி நடவடிக்கை எடுத்திருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது. வங்கியின் ஒதுக்கங்களில் படிப்படியான அதிகரிப்பு இருந்த போதும் 2014 ஆம் ஆண்டில் அதிகரித்த மூலதனத்தை முழுமையாக முதலீடு செய்வதன் மூலம் உயர் ஆர்ஓஈ பெறுமதி மேற்கொள்ளப்பட்டிருந்ததால் 2015 இல் அதனை அடைவதற்கு வங்கி நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ii) தேறிய வட்டி இலாப எல்லை முன்னைய ஆண்டின் 3.1 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டில் 3.3 சதவீதத்திற்கு சற்று முன்னேற்றடைந்திருந்தது. நிதி முதலீடுகளிலிருந்தான வட்டி வருமான அதிகரிப்பு, முன்னேற்றமடைந்த கடன் தொகுதி ஊடான காலக் கடன்கள் மற்றும் தனிநபர்க் கடன்களிலிருந்தான வட்டி மற்றும் வட்டிச் செலவினங்களின் 4 சதவீதமான குறைவு என்பன இதற்கான அடிப்படைக் காரணமாகவுள்ளன.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 கடன் நிர்வாகம்

#### (அ) செயற்பாடற்ற கடன்கள் (என்பீஏ) மற்றும் முற்பணங்கள்

(i) ஈடுவைக்கப்பட்ட பிணைகள் மற்றும் வாடிக்கையாளரின் கடன் தீர்க்கும் தன்மை என்பவற்றை முறையாக மதிப்பீடு செய்யாமல் சில கடன்கள் மற்றும் முற்பணங்கள் வழங்கப்பட்டிருந்தமையை கணக்காய்வு தெரிவுச் செவ்வையில் வெளிப்பட்டிருந்ததுடன் வாடிக்கையாளர்களின் கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக்கூற்றுக்கள் மற்றும் வியாபாரத்தின் ஸ்தாபிப்பு தொடர்பான சட்டபூர்வ ஆவணங்கள் என்பன கால அடிப்படையில் பெறப்பட்டிருக்கவில்லை. மேலும் முற்பணங்களிற்கான தொடர்புக் கோவைகள் தொடர்புபட்ட ஆவணங்கள் மற்றும் தகவல்களுடன் நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை. சில சந்தர்ப்பங்களில் ஈடுவைக்கப்பட்ட ஆதனங்களிற்கெதிரான காப்புறுதிக் கொள்கைகள் பெறப்பட்டிருக்கவில்லை/ முறையாகப் புதுப்பிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், ஈடுவைக்கப்பட்ட ஆதனங்கள் தொடர்பாக ஒழுங்கான பரீட்சிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டிருக்காததுடன் சில சந்தர்ப்பங்களில் சம்பந்தப்பட்ட கடன்பெறுநரிடமிருந்து ஈடுசெய்யும் கடிதங்கள் பெறப்பட்டிருக்கவில்லை.

மேலும், வெவ்வேறு செயற்பாட்டுத் தளங்களின் கீழ் வாடிக்கையாளர்களுக்கு வழங்கப்பட்ட அனைத்து வசதிகளையும் உள்ளடக்குகின்ற தன்னியக்க மத்திய பொறுப்பு அறிக்கையைப் பெறுவதற்கான முறைமையொன்றை வங்கி வைத்திருக்கவில்லை. பதிலாக முகாமைத்துவமானது விரிவான வங்கி முறைமை (ஐசீபீஎஸ்), குத்தகை மற்றும் வியாபார நிதி முறைமையை ஒன்றிணைத்திருக்கின்ற வெவ்வேறு முறைமைகளிலிருந்து பெறப்பட்ட அறிக்கைகளை தனியாக இணக்கம் செய்கின்றது. வாடிக்கையாளர்களின் இணைந்த வெளிப்படுத்துகை ரூபா 100 மில்லியன் தனிநபர் முக்கிய கடன் (ஐஎஸ்எல்) எதிர்பார்ப்பு மட்டமாக இருந்த போதிலும் முக்கியமான சில வாடிக்கையாளர்களின் மொத்த வெளிப்படுத்துகை தனிநபர் முக்கிய கடன்களாக (ஐஎஸ்எல்) எடுக்கப்பட்டிருக்கவில்லை என மேலும் அவதானிக்கப்பட்டது.

(ii) 2011 இலிருந்து 2013 வரையான 3 ஆண்டுகள் காலப்பகுதிக்கான செயற்பாடற்ற கடன்கள் மற்றும் முற்பணங்கள் விகிதம் 2.1 சதவீதத்திலிருந்து 4.3 சதவீதம் வரை அதிகரித்திருந்ததுடன் தங்க விலைகளின் வீழ்ச்சிக்கான எதிர்செயற்பாட்டால் தங்கநகை அடகு தொகுதியில் செயற்பாடற்ற முற்பணங்களின் அதிகரிப்பு இதற்கான முக்கிய காரணமாக இருந்தது. மேலும், சொத்துக்கள் கணக்கிற்கு மேற்கூறப்பட்ட செயற்பாடற்ற கடன் கணக்கிலிருந்து ரூபா 19,965,835,972 தொகையை மாற்றீடு செய்து 2013 இல் 4.3 சதவீத செயற்பாடற்ற கடன் விகிதத்தை 2014 ஆம் ஆண்டின் இறுதியிலுள்ளவாறு 3.8 சதவீதத்திற்கு குறைக்கும் திறமை வங்கியிடம் இருந்த போதிலும் செயற்பாடற்ற கடன் விகிதம் 2014 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2015 ஆம் ஆண்டின் இறுதியிலுள்ளவாறு 4.3 சதவீதத்திற்கு மீண்டும் ஒரு தடவை அதிகரித்திருந்ததுடன் இது 13.15 சதவீதம் அதிகரித்திருந்தது. செயற்பாடற்ற கடன்களில் அதிகரிப்பு ஏற்பட்டமை இதற்கான பிரதான காரணமாக உள்ளது.

(iii) தெரிவுசெய்யப்பட்ட 07 கிளைகளின் செயற்பாடற்ற முற்பணங்களும் (என்பிஏ) மீளாய்வாண்டிற்கான உயர் சதவீதங்களைப் பிரதிபலித்திருந்தன.

| கிளைப் பெயர் | மொத்த முற்பணம் | மொத்த என்பிஏ | மொத்த முற்பணத்தின் சதவீதமாக என்பிஏ |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | |
| அச்சுவேலி | 776,572,646 | 532,695,076 | 68.60 |
| கோப்பாய் | 405,875,196 | 176,574,934 | 43.50 |
| மாவனெல்லை | 1,982,938,467 | 858,425,824 | 43.29 |
| சுன்னாகம் | 1,216,022,982 | 502,009,515 | 41.28 |
| பேலியகொடை மீன் சந்தை | 959,485,418 | 324,293,063 | 33.80 |
| கிளிநொச்சி | 972,588,487 | 310,999,353 | 31.98 |
| ஐந்தாம் நகரக் கிளை | 1,187,753,121 | 290,640,646 | 24.47 |

(iv) மீளாய்வாண்டின் இறுதியிலுள்ளவாறான கடன்கள் மற்றும் முற்பணங்களுடன் தொடர்புடைய பிரதான பத்து வாடிக்கையாளர்களின் செயற்பாடற்ற கடன்கள் மற்றும் முற்பணங்கள் ரூபா 5,044,828,796 ஆக இருந்தது. விபரங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| கடன்கள் மற்றும் முற்பணங்களின் வகைகள் | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்பாடற்ற தொகை |
|---|---|
| | ரூபா |
| கடன்கள் | 3,669,994,752 |
| மேலதிகப்பறறு | 994,818,508 |
| கடன் அட்டை | 11,495,724 |
| குத்தகை | 368,519,812 |
| **மொத்தம்** | **5,044,828,796** |

(v) 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான தனியொரு தவணைப்பணமானது அறவிடப்பட்டிருக்காத 83 கிளைகளினுள் ஒரு மில்லியனை விடக் கூடுதலான 316 கடன்களுடன் தொடர்புடைய நிலுவைக் கடன் மீதிகள் ரூபா 4,929,579,209 ஆகும்.

(vi) வங்கியின் ஆறு கிளைகள் அவற்றின் மூலம் வழங்கப்பட்ட மொத்த மேலதிகப்பற்று வசதிகளுக்கு எதிராக ஆகக்கூடிய செயற்பாடற்ற வீதங்களை பதிவுசெய்திருந்தன. 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த மேலதிகப்பற்று மீதி ரூபா 1,307,193,267 ஆக இருந்ததுடன் அத் திகதியிலுள்ளவாறான மொத்தச் செயற்பாடற்றவை 39.96 சதவீதத்திலிருந்து 89.42 சதவீதம் வரையான வீச்சில் ரூபா 743,558,187 ஆக இருந்தது.

| கிளையின் பெயர் | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த மேலதிகப்பற்று மீதி | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த என்பிஏ மேலதிகப்பற்று மீதி | மொத்த மேலதிகப்பற்றின் சதவீதமாக என்பிஏ |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | |
| மீன் சந்தை - பேலியகொடை | 264,239,930 | 236,290,701 | 89.42 |
| மாவனெல்ல | 149,459,874 | 94,987,349 | 63.55 |
| ஐந்தாம் நகரக் கிளை | 310,929,933 | 150,993,703 | 48.56 |
| புலத்சிங்ஹள | 91,960,147 | 44,387,406 | 48.27 |
| மருதானை | 316,397,641 | 147,283,071 | 46.55 |
| கடுருவெல | 174,205,742 | 69,615,957 | 39.96 |
| **மொத்தம்** | **1,307,193,267** | **743,558,187** | |

(vii) வங்கியின் அட்டை நிலையம் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 80,628 கடன் அட்டைகளை வழங்கியிருந்ததுடன் அத் திகதியில் உள்ளவாறான மொத்த நிலுவை மீதிகள் ரூபா 2,861,176,429 தொகையாகும். அதில் ரூபா 162,881,341 தொகை அல்லது 5.69 சதவீதம் செயற்பாடற்றதாக வகைப்படுத்தப்பட்டிருந்தது. மொத்த செயற்பாடற்ற முற்பணங்களின் விபரங்கள் கீழ்வருமாறு இருந்தன.

| வகை | தொகை |
|---|---|
| | ரூபா |
| தவணை கடந்தவை | 4,015,861 |
| தரங்குறைந்தவை | 11,355,294 |
| ஐயத்திற்கிடமானவை | 10,769,335 |
| நட்டம் | 136,740,851 |
| **மொத்தம்** | **162,881,341** |

(viii) அட்டைகளைப் பெற்றதிலிருந்து 2015 திசெம்பர் 31 வரை தனியொரு தவணைப்பணத்தையேனும் செலுத்தியிருக்காத அட்டை உடமையாளர்களின் எண்ணிக்கை 71 ஆக இருந்ததுடன் மொத்த நிலுவைத் தொகை ரூபா 1,653,083 ஆக இருந்தது. மேலும், மீளாய்வாண்டின் போது பதிவழிக்கப்பட்ட மூலதனம் மற்றும் வட்டி முறையே ரூபா 20,483,533 மற்றும் ரூபா 31,127,582 ஆக இருந்தன.

**(ஆ) மேலதிகப்பற்று வசதிகளை வழங்குதல்**

அவசர நிதிக் கடப்பாடுகளை எதிர்கொள்வதற்கு பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்துடன் பொதுத் திறைசேரியின் வேண்டுதல் மீது 2014 திசெம்பர் 15 இலிருந்து 30 நாட்கள் காலப்பகுதியொன்றிற்காக வாடிக்கையாளரொருவரிற்கு ரூபா 100 மில்லியன் தொகையான தற்காலிக மேலதிகப்பற்று வழங்கப்பட்டிருந்தது.

மேலும், திறைசேரியின் பிரதிச் செயலாளரிடமிருந்தான 2015 யூன் 25 ஆம் திகதிய கடிதத்தின் மூலம், ரூபா 225 மில்லியன் வரை தற்காலிக மேலதிகப்பற்று (ரீஓடி) வசதியை அதிகரிப்பதற்கு வேண்டப்பட்டிருந்தது. அதற்கிணங்க, 2015 யூலை 07 இல் ரூபா 225 மில்லியன் அதிகரிப்பினை சபை அங்கீகரித்திருந்ததுடன் 2015 யூலை 03 ஆம் திகதிய கடிதத்திலிருந்து இன்னொரு 6 மாதங்கள் காலப்பகுதிக்கு மேலதிகப்பற்று விரிவுபடுத்தப்பட்டிருந்தது. ரூபா 225 மில்லியனான இந்த ரீஓடி 2015 ஆம் ஆண்டின் இறுதியிலுள்ளவாறு செலுத்தப்பட வேண்டியுள்ளது.

**(இ) குத்தகை வசதிகளை வழங்குதல்**

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(i) வங்கியின் பின்வரும் 07 கிளைகள் குத்தகை வர்த்தகம் தொடர்பாக 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 366,379,061 ஆன உயர்ந்த செயற்பாடற்ற முற்பணங்களைப் பதிவு செய்திருந்தன. விபரங்கள் கீழே தரப்படுகின்றன.

| கிளையின் பெயர் | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவை மீதி | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த என்பிஎ | மொத்த நிலுவையின் சதவீதமாக என்பிஎ |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | |
| தெஹிவளை உயர்தரக் கிளை | 188,650,508 | 68,834,682 | 36.49 |
| கடுவல | 135,523,771 | 43,451,315 | 32.06 |
| மிரிஹம | 78,965,861 | 25,016,384 | 31.68 |
| மீன் சந்தை பேலியகொடை | 159,919,153 | 26,868,987 | 16.80 |
| மாலபே | 295,565,751 | 41,879,092 | 14.17 |
| கூட்டு உறவுகள் | 561,420,527 | 68,820,405 | 12.26 |
| மெற்ரோ | 909,984,626 | 91,508,196 | 10.06 |
| **மொத்தம்** | **2,330,030,197** | **366,379,061** | |

(ii) 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான வங்கியின் மொத்த குத்தகை வெளிப்படுத்துகையின் அண்ணளவான 44.5 சதவீதம் அரசாங்கம் மற்றும் அரச உடைமை தொழில்முயற்சிக்கான (எஸ்ஓஈஎஸ்) கடனளித்தலை உள்ளடக்குகின்றது.

**(ஈ) தங்கநகை அடகு வசதிகளை வழங்குதல்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(i) 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான வங்கித் தொகுதியின் ''ரண் சுரக்கும் நய சேவா'' கீழ்வருமாறு உள்ளது.

| | நிலுவை மூலதனம் | பெறவேண்டிய வட்டி |
|---|---|---|
| | ரூபா | ரூபா |
| ஒழுங்கானவை | 47,863,462,464 | 2,414,330,715 |
| செயற்பாடற்றவை | 6,400,536,722 | 1,763,579,051 |

(ii) 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 176 கிளைகள் தொடர்பில் ரூபா 199.3 மில்லியன் பெறுமதியான தரமற்ற, போலியான மற்றும் களவாடப்பட்ட பொருட்களும் ரூபா 92.3 மில்லியன் அட்டுறு வட்டியும் (அண்ணளவாக) கண்டுபிடிக்கப்பட்டன.

**(உ) அரச துறைக்கு வசதிகளை வழங்குதல்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

**(i) ரூபா 5.128 பில்லியன் தொகையான வசதிகளை நெல் சந்தைப்படுத்தல் சபைக்கு வழங்குதல்**

நெல் கொள்வனவு செய்வதற்கு பொதுத் திறைசேரியால் வழங்கப்பட வேண்டிய ஆறுதல் நிலுவைக் கடிதத்தை அடிப்படையாகக் கொண்டு மீளாய்வாண்டின் போது நெல் சந்தைப்படுத்தல் சபைக்கு ரூபா 5.128 பில்லியன் கூட்டுத்தொகையான கடன்களை வங்கி வழங்கியிருந்தது. கொடுப்பனவுகள் ஒரு வருடத்திற்குள் செலுத்த வேண்டியவையாக இருந்ததுடன் உரிய திகதியில் பொதுத் திறைசேரி ஆறுதல் கடிதத்தை வங்கி பெற்றிருக்கவில்லை. அதேநேரம், 2012 ஆம் ஆண்டின் போது அதே தன்மை அடிப்படையில் வழங்கப்பட்ட ரூபா 3.5 பில்லியன் கடன் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவையாக இருந்தது.

**(ii) நட்டமடையும் அரச உடமையாக்கப்பட்ட தொழில்முயற்சிகளின் கழிவு நட்ட மதிப்பீட்டில் கருத்திற்கொள்ளப்பட்ட செல்லுபடியாகும் மதிப்பீடுகள் மற்றும் கருதுகோள்களின் தேவைப்பாடு**

2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான வங்கியின் மொத்த செலவு வெளிப்படுத்துகையின் அண்ணளவான 37 சதவீதம் அரச உடமையாக்கப்பட்ட தொழில்முயற்சிகள் (எஸ்ஓஈஎஸ்) உள்ளடங்கலாக இலங்கை அரசாங்கத்திற்கான கடன்வழங்கலை உள்ளடக்குகின்றது. கழிவு நட்ட மதிப்பீட்டின் போது, அவை அரசாங்கத்திற்கு இணைக்கப்பட்டிருந்த சூழ்நிலைகளில் நட்டமற்றவையாக சில முக்கிய எஸ்ஓஈஎஸ் ஐ வங்கி கருதியிருந்தது. அவ்வாறான சில முக்கியமான கருத்திற்கொள்ளல்கள் கீழே தரப்பட்டுள்ளன

| அரச உடமையாக்கப்பட்ட தொழில்முயற்சியின் பெயர் | முக்கியமான கருத்திற்கொள்ளல்கள் | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
|---|---|---|
| | | ரூபா. மில்லியன் |
| இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் | ஐ.அ.டொலர் 900 மில்லியன் திறைசேரி உத்தரவாதம் | |
| | - ஐந்தொகையில் | 97,689 |
| | - ஐந்தொகையற்றதில் | 62,421 |
| நெல் சந்தைப்படுத்தல் சபை | பாதுகாப்பற்ற கடன் மீதிகள் | |
| | - மூலதன நிலுவை | 5,128 |
| | - வட்டி நிலுவை | 4,600 |
| வரையறுக்கப்பட்ட லங்கா சதோச கம்பனி | பாதுகாப்பற்ற கடன் மீதிகள் (திறைசேரி உத்தரவாதக் காலத்தை நீடிக்காமல் மீளச்செலுத்தல் காலத்தை நீடித்தமை) | |
| | - மூலதன நிலுவை | 6,992 |
| | - வட்டி நிலுவை | 219 |
| நகர அபிவிருத்தி அதிகாரசபை | பாதுகாப்பற்ற கடன் மீதிகள் | |
| | - மூலதன நிலுவை | 11,000 |
| | - வட்டி நிலுவை | 264 |

கடன் ஏய்ப்புச் செய்தல் விடயத்தில் நட்டமடையும் நிறுவனங்கள் சார்பில் செலுத்த வேண்டியவைகளைத் தீர்ப்பதற்கான அரசாங்கத்தின் இயலுமையினை கருத்திற்கொண்டு, நட்டமடையும் அரச உடமையாக்கப்பட்ட நிறுவனங்களிற்கு இணைக்கப்பட்ட எதிர்தரப்புக் கடன் ஆபத்தை முகாமைத்துவம் மதிப்பிட வேண்டியுள்ளது.

**(ஊ) பதிவழிக்கப்பட்ட கடன்கள் மற்றும் முற்பணங்கள்**

கடந்த நான்கு ஆண்டுகளின் போது பதிவழிக்கப்பட்ட நிலுவைக் கடன்கள் மற்றும் முற்பணங்கள் தொடர்பிலான மூலதனம் மற்றும் வட்டி கீழே தரப்பட்டுள்ளன.

| ஆண்டு | 2015 | 2014 | 2013 | 2012 |
|---|---|---|---|---|
| மூலதனம் (ரூபா.) | 109,397,125 | 54,690,892 | 102,993,177 | 44,316,750 |
| வட்டி (ரூபா) | 98,536,345 | 67,615,763 | 247,395,147 | 138,161,976 |
| பதிவழிக்கப்பட்ட கடன்களின் எண்ணிக்கை | 554 | 424 | 285 | 315 |

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(i) 2015 ஆம் ஆண்டில் பதிவழிக்கப்பட்ட மொத்த மூலதனம் ரூபா 109,397,125 ஆனதுடன் இது வங்கியின் 554 வாடிக்கையாளர்களை

பிரதிநிதித்துவப்படுத்துகின்றது. எனினும், 2015 ஆம் ஆண்டின் போது கம்பனியொன்றின் மூலதனப் பங்காக ரூபா 55,151,756 தொகையை வங்கி பதிவழித்திருந்ததுடன் இது 2015 ஆம் ஆண்டில் பதிவழிக்கப்பட்ட மொத்த மூலதனத்தின் 50.41 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்றது.

(ii) கப்பலை ஈடுவைப்பதன் மூலமும் தொடர்புடைய கம்பனியால் வழங்கப்பட்ட கூட்டு உத்தரவாதத்தின் மீதும் வணிகக் கப்பலொன்றைக் கொள்வனவு செய்வதற்காக கப்பல் கம்பனியொன்றிற்கு ஐ.அ.டொலர் 1.60 மில்லியனான தவணைக் கடன் வசதியை வங்கி வழங்கியிருந்தது. 2015 யூலை 08 ஆம் திகதிய பணிப்பாளர் சபைக்கான குறைநிரப்பு பிரேரணையின் பிரகாரம், ரூபா 75 மில்லியனை (ஐ.அ.டொலர் 531,537.92) முழுமையாகவும் கப்பல் கம்பனியின் மொத்தப் பொறுப்புக்களின் இறுதி தீர்ப்பனவாகவும் பணிப்பாளர் சபை ஏற்றுக்கொண்டும் செலுத்த வேண்டிய தொகையை அறவிடுவதற்காக கப்பலை காவலில் வைப்பதற்கோ அல்லது கப்பலின் மீது வங்கிக்கு உரித்தான நட்டஈடாக காப்புறுதிக் கம்பனியிடமிருந்து காப்புறுதிக் கோரிக்கையை பெற்றுக்கொள்வதற்கோ நடவடிக்கை எடுக்காமல் குறிப்பிடப்பட்ட கப்பல் கம்பனியிடமிருந்து பெறவேண்டிய ரூபா 108,015,611 எஞ்சிய மீதியை பதிவழிப்பதற்கும் அங்கீகரித்திருந்தது.

## 4.2 வங்கியின் சந்தைப் பங்கு

வங்கித் துறையில் சந்தை முன்னோடி நிலையை வங்கி சொந்தமாக்கியிருந்த போதிலும் வங்கித் துறையில் பெற்ற சந்தைப் பங்கு தற்போதைய வங்கி நிலைமையின் கீழ் கடந்த ஐந்து ஆண்டுகளின் போது சற்றுக் குறைவடைந்திருந்தமை அவதானிக்கப்பட்டது. விபரங்கள் கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

### (அ) கடன்கள் மற்றும் முற்பணங்கள்

| | ஆண்டு | | | | |
|---|---|---|---|---|---|
| | 2015 | 2014 | 2013 | 2012 | 2011 |
| வங்கியின் மொத்தக் கடன்கள் மற்றும் முற்பணங்கள் (ரூபா. மில்லியன்) | 687,042 | 565,425 | 550,718 | 501,041 | 406,039 |
| சந்தையின் மொத்தக் கடன்கள் மற்றும் முற்பணங்கள் (ரூபா. மில்லியன்) | 3,477,005 | 2,775,708 | 2,546,105 | 2,304,056 | 1,905,682 |
| வங்கியின் சந்தைப் பங்கு (%) | 19.76 | 20.37 | 21.63 | 21.75 | 21.31 |

### (ஆ) வைப்புக்கள்

| | ஆண்டு | | | | |
|---|---|---|---|---|---|
| | 2015 | 2014 | 2013 | 2012 | 2011 |
| வங்கியின் மொத்த வைப்புக்கள் (ரூபா. மில்லியன்) | 789,877 | 692,371 | 615,059 | 494,901 | 432,070 |
| சந்தையின் மொத்த வைப்புக்கள் (ரூபா. மில்லியன்) | 3,772,910 | 3,226,612 | 2,883,661 | 2,450,490 | 2,037,294 |
| வங்கியின் சந்தைப் பங்கு (%) | 20.94 | 21.46 | 21.33 | 20.20 | 21.21 |

**(இ) தரப்படுத்தல்**

---

2015 ஆம் ஆண்டிற்கான வங்கித் துறை தரப்படுத்தலில் வங்கியின் நிலைமை பின்வருமாறு இருந்தது.

**(i) உலகளாவிய தரப்படுத்தல்**

---

2015 ஆம் ஆண்டின் போது USD Senior notes "BB- with stable outlook" ஐ Fitch தரப்படுத்தல்கள் மீள உறுதிப்படுத்திய அதேநேரம் "B1 with stable outlook" ஐ Moody's மீள உறுதிப்படுத்தியது. எவ்வாறாயினும், 2016 மார்ச்சில் அரச தரப்படுத்தலின் மீளாய்வு காரணமாக "BB- stable outlook" இலிருந்து "B+ with negative outlook" வரை பீஓசீ இன் தரப்படுத்தலை Fitch தரப்படுத்தல்கள் மீளாய்வுசெய்திருந்தது.

**(ii) உள்ளூர் தரப்படுத்தல்**

---

2015 ஆம் ஆண்டின் போது வரையறுக்கப்பட்ட லங்கா பிற்ச் றேரிங்ஸ் வங்கியின் தரப்படுத்தலை "AA+ (lka) with stable outlook" ஆக மீள உறுதிப்படுத்தியதுடன் வரையறுக்கப்பட்ட ஐசிஆர்ஏ லங்கா "(SL) AAA with stable outlook" ஐ மீள ஒதுக்கியது.

**4.3 முகாமைத்துவப் பலவீனங்கள்**

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) **வங்கிக்கெதிராக தொடரப்பட்ட சட்ட வழக்குகள்**

---

வங்கிக்கெதிராக வெளியாட்களினால் நூற்றியெழுபத்தேழு (177) சட்ட வழக்குகள் தொடரப்பட்டிருந்ததுடன் அவற்றில் மூன்று நபர்களினால் தொடரப்பட்ட 05 வழக்குகள் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வங்கிக்கு சாதகமற்றதாக இனங்காணப்பட்டிருந்ததுடன் 02 வழக்குகள் தொடர்பில் கமத்தொழில் காப்புறுதிச் சபைக்கு நட்டஈடாக ரூபா 5.6 மில்லியன் கொடுப்பனவை உறுதிப்படுத்தி வங்கிக்கெதிராக தீர்ப்பு ஏற்கனவே வழங்கப்பட்டிருந்தது.

அதற்கு மேலதிகமாக, பணம் அறவிடப்படும் விடயங்களுடன் தொடர்புடைய ஏனைய சாதகமற்ற வழக்குகளிற்கான தீர்ப்பு வழங்கப்பட வேண்டியிருந்ததுடன் தீர்ப்பு வங்கிக்கெதிராக இருந்தால் வெளியாட்களிற்கு ரூபா 171.15 மில்லியன் நட்டஈட்டை செலுத்துவதற்கு வேண்டப்பட்டிருந்தது.

**(ஆ) பெறுநர் கணக்கிற்கான காசோலை தேறல்**

---

சட்டங்கள், விதிகள் மற்றும் வங்கி நடைமுறைகளை கருத்திற்கொள்ளாமல் 2011 இல் மூன்றாம் தரப்பினர்களுக்கு சாதகமாக வரையப்பட்ட நான்கு குறுக்குக்கோடிடப்பட்ட காசோலைகளை (ரூபா 1,001,000 தொகையான பெறுநர் கணக்கு மாத்திரம்) வங்கியின் தனிப்பட்ட கிளை பணமாக்கியிருந்தது.

**(இ) குத்தகை உடன்படிக்கைகள் இல்லாமை**

---

அலுவலகக் கட்டிடங்களை நிர்மாணிப்பதற்கு அரசாங்கத்திடமிருந்து பெற்ற 23 குத்தகைக் காணிகளிற்கான சட்டரீதியாக தயாரிக்கப்பட்ட குத்தகை உடன்படிக்கைகளை வங்கி பெற்றுக்கொண்டிருக்கவில்லை. சில சந்தர்ப்பங்களில் உரிய அதிகாரங்களால் வழங்கப்பட்ட கடிதங்கள் போன்ற அலுவலகரீதியான தொடர்புசாதனங்கள் காணப்பட்டதுடன் சில விடயங்களில் அத்தகைய குத்தகை

ஆதனங்களை பயன்படுத்துவதற்கான உரிமைகளை உறுதிப்படுத்துவதற்கான எந்தவொரு ஆதாரத்தையும் வங்கி கொண்டிருக்கவில்லை.

**(ஈ) உண்மையான மதிப்பீட்டு அறிக்கையின் பொருத்தமான மீளாய்வுச் செய்முறை இல்லாமை**

ஊழியர் நலன்களுடன் தொடர்புடைய உண்மையான மதிப்பீட்டு அறிக்கைகளை மீளாய்வு செய்வதற்கு பொருத்தமான மீளாய்வுச் செய்முறையை வங்கி கொண்டிருக்காமை அவதானிக்கப்பட்டது. தற்போதைய ஆண்டின் உண்மையான மதிப்பீட்டு அறிக்கையின் மீளாய்வின் போது உண்மையான மற்றும் வரைபு மதிப்பீட்டு அறிக்கைகள் போன்றவற்றிற்கான தரவுகளை வழங்குவது தொடர்பில் பல வேறுபாடுகள் வெளிப்பட்டிருந்தன. அத்தகைய வேறுபாடுகள் தொடர்ந்து சீராக்கப்பட்டிருந்தன.

ஆகையால், உண்மையான மதிப்பீடுகளின் உண்மைத்தன்மை மற்றும் நியாயத்தன்மையை உறுதிப்படுத்துவதற்காக முறையான மீளாய்வுப் பொறிமுறையொன்றை முகாமைத்துவம் ஸ்தாபிக்கின்றமை அவசியமானதாகவுள்ளது. உண்மையானதை நியமிப்பதிலுள்ள காலதாமதம் காரணமாகவும் உண்மையானவற்றிற்கு சமர்ப்பிக்கப்பட்ட பிழையான தரவு காரணமாகவும் உண்மையான பெறுமதி கணிப்பீட்டின் இறுதியாக்கல் கடினமானதாக உள்ளது.

**(உ) தற்போதுள்ள ஊழியர் நலன் ஏற்பாடுகளை மீளாய்வு செய்தல் தேவைப்பாடு**

வங்கியின் தற்போதுள்ள ஊழியர் நலன் ஏற்பாடுகளை வங்கி மீளாய்வு செய்ய வேண்டியதுடன் தேவைப்பட்டால் மீளக்கட்டமைக்க வேண்டும். வங்கியின் தற்போதுள்ள ஊழியர் நலன் ஏற்பாடுகள் தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(i) 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு, நிதிக்கூற்றுக்களில் இனங்காணப்பட்டிருக்காத வங்கியின் விதவைகள்/ தபுதாரர் மற்றும் அநாதைகள் ஓய்வூதிய நிதியத்தின் திட்டமிடப்பட்ட சொத்துக்களின் நியாயமான பெறுமதி ரூபா 4 பில்லியனால் நிதியத்தின் பொறுப்புக்களை விஞ்சியிருந்தது. (2014 - ரூபா 2.8 பில்லியன்).

(ii) ஓய்வூதியர்களினதும் விதவைகள்/ தபுதாரர் மற்றும் அநாதைகள் ஓய்வூதியர்களினதும் சுகாதார நிதியம் மற்றும் 96 இலங்கை வங்கிப் பதவி ஓய்வூதிய நிதியம் என்பவற்றிற்கான நம்பிக்கைப்பொறுப்பு உறுதிகளை வங்கி கொண்டிருக்கவில்லை. அந்த நிதியங்களின் செயற்பாடுகள் மற்றும் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தும் தேவைப்பாடுகள் என்பவற்றில் முரண்பாடுகளை விளைவிக்கும் இந்த ஊழியர் நலன்களிற்காக பொருத்தமான சட்டக் கட்டமைப்பு இல்லாததை நம்பிக்கைப்பொறுப்பு உறுதிகள் கிடைக்காமை சுட்டிக்காட்டுகின்றது.

**(ஊ) தன்னியக்க ரெலர் இயந்திர (ஏரீஎம்) சிப் பொறுப்பை மாற்றுதல்**

2013 மே இல் வங்கியின் பதவிநிலை அலுவலர்களுடன் பகிர்ந்துகொள்ளப்பட்டிருந்த 2013 மே 15 இன் 05 ஆம் இலக்க உலகலாவிய பாதுகாப்பு அறிக்கையின் பிரகாரம், உள்ளூர் ஏரீஎம் கொடுக்கல்வாங்கல் சிப் பொறுப்பை மாற்றுதல் பங்களாதேஷ், பூட்டான், மாலைதீவு, நேபாளம் மற்றும் இலங்கை என்பவற்றில் 2015 ஒக்தோபர் 16 இலிருந்து பிரயோகிக்கப்படும். ஏரீஎம் ஆரம்ப அறிவித்தலிற்கு புறம்பாக, வங்கியின் ஏரீஎம்களிற்கான செயற்பாட்டை பெற்றுக்கொண்டு யூரோ மாஸ்ரர் விசா (ஈஎம்வீ) சிப் ஐ ஆரம்பிப்பதற்கு வேண்டியிருந்த மாஸ்டர் அட்டையிடமிருந்து வங்கி 2015 இன் போது பல நினைவூட்டல்களை பெற்றிருந்ததுடன் வங்கிக்கான அனைத்து ஏரீஎம்களும் 2015 ஒக்தோபர் 16 இல்

கொடுக்கப்பட்ட காலவரையறையினுள் ஈஎம்வீ சிப் ஐ இயக்கியுள்ளதை உறுதிப்படுத்துகின்றது. ஈஎம்வீ சிப் தொழில்நுட்பம் தவறான கொடுக்கல்வாங்கல்களை குறைப்பதற்காக சிப் அற்ற தொழில்நுட்பத்திற்கான மிகவும் பாதுகாப்பான மாற்றுவழியொன்றை வழங்க முடியும்.

சிப் பொறுப்பை மாற்றுதல் தெற்காசியாவின் மேற்குறிப்பிடப்பட்ட நாடுகளிலுள்ள எந்தவொரு ஏரீஎம்களிலும் பயன்படுத்தப்படுகின்ற போலியான காந்தப்பட்டை அட்டையொன்றானதுடன் ஏரீஎம் ஐ ஈஎம்வீ சிப் இயக்காதுவிட்டால் பெறுபவரிற்கு மீள அறவிடும் பொறுப்பு மாறுகின்றது.

2015 ஒக்தோபரில் பொறுப்பை மாற்றுதல் மீதான மாஸ்டர் அட்டையின் அறிவுறுத்தல் காரணமாக இருந்தபோதிலும் திகதிக்கான வங்கியின் எந்தவொரு கட்டுப்பாட்டிலும் உள்ள இடரை வங்கி இனங்கண்டிருக்கவில்லை. தற்போது செயற்திட்டம் பூரணப்படுத்தப்படவுள்ளதுடன் தவறான கொடுக்கல்வாங்கல்கள் மீதான பெறுப்புக்களிற்காக வங்கி திறக்கப்பட்டுள்ளது.

## 4.4 சர்ச்சைத் தன்மையான விடயங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

### (அ) அடகு மீட்கப்படாத தங்க நகைகளை உருக்குதல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(i) 2014 யூன் 18 இன் 21 ஆம் இலக்க சுற்றறிக்கையால் திருத்தப்பட்ட 2010 ஜனவரி 15 ஆம் திகதிய தங்கநகை அடகு முற்பண சேவைகள் தொடர்பான 46/2010 ஆம் இலக்க அலுவலக அறிவுறுத்தல் சுற்றறிக்கையின் பிரகாரம், ஏலமிடப்பட்ட பின்னர் விற்பனை செய்யப்படாதுள்ள அடகு மீட்கப்படாத தங்கநகையினை கையிலுள்ள தங்கம் என பெயரிடப்பட்ட கணக்கிற்கு மாற்றுவதற்கு கிளைகள் அறிவுறுத்தப்பட்டிருந்தன. அதற்கிணங்க, கிளைகள் ரூபா 19,965,835,972 தொகையான தங்கநகை அடகுக் கடன் பெறுமதியை 2014 நவம்பர் 30 இல் உள்ளவாறான கையிலுள்ள தங்க கணக்கிற்கு மாற்றியிருந்தது.

(ii) அவ்வாறு மாற்றப்பட்டிருந்த தங்கத்தில், ரூபா 570.38 மில்லியன் பெறுமதியான 112.62 கிலோகிராம் உருக்கப்பட்டிருந்ததுடன், உருக்கப்பட்டதிலிருந்து பெறப்பட்ட தங்கத்தின் நிறை 111.68 கிலோகிராமாகவும் பெறுமதி ரூபா 451.98 மில்லியன் தொகையாகவும் இருந்தன. ஆகையால் உருக்குதலில் ரூபா 118.40 மில்லியன் பெறுமதியான 940 கிராம் தங்கம் குறைவடைந்திருந்ததை சுட்டிக்காட்டுகின்றது.

(iii) தலைமை அலுவலக பிரதான பெட்டகத்தில் 2015 திசெம்பர் 30 இல் மேற்கொள்ளப்பட்ட பௌதீக மெய்மையாய்வின் போது உருக்கிய தங்கத்தின் 37.19 கிராம் பற்றாக்குறையொன்று அவதானிக்கப்பட்டது. அதற்கிணங்க, ‘‘இருப்பு புத்தகத்தில் குறிப்பிடப்பட்ட உருக்கப்பட்ட தங்கக் கட்டிகளின் தங்க நிறை சேவை வழங்குனரால் பயன்படுத்தப்பட்ட நிறையளத்தல் இயந்திரங்கள் காண்பித்த எண்களையே பதிவுசெய்யப்பட்டிருந்தன’’ என தலைவர் பதிலளித்திருந்தார். நியமங்கள் மற்றும் சேவைகள் திணைக்கள அளவீட்டுப் பிரிவினால் மேற்கொள்ளப்பட்ட அளவுத் திருத்தத்தின் பின்னர் நுகர்வோர் உற்பத்திப்பொருள் முகாமைத்துவ திணைக்கள ரண் சுரக்கும் நயசேவா பிரிவின் புதிதாக கொள்வனவு செய்யப்பட்ட நிறையளத்தல் இயந்திரத்தைப் பயன்படுத்தி பௌதீக மெய்மையாய்வானது மேற்கொள்ளப்பட்டிருந்தது. பௌதீக மெய்மையாய்வின் போது சேவை வழங்குனரின் நிறையளத்தல்

இயந்திரத்தை பயன்படுத்தி பதிவுசெய்யப்பட்ட நிறையை விட 37.19 கிராம் குறைவான நிறையை விளைவித்திருந்தது.

**(ஆ) இலங்கை அரசாங்கத்தின் நிலுவையாகவுள்ள இறக்குமதிப் பட்டியல் கொடுக்கல்வாங்கல்களைத் தீர்த்தல்**

இலங்கை வங்கியானது அமெரிக்க டொலர் 5,000 அல்லது அதற்கு மேல் கொள்வனவு செய்வதற்காக அதன் வாடிக்கையாளர்களிற்கு பிரயோகிக்கப்படுகின்ற விசேட விலைவீதங்களை இலங்கை வங்கி வழங்குகின்றது. இந்த விசேட விலைவீதங்கள் வாடிக்கையாளர் விண்ணப்பிக்கும் நேரத்தில் சந்தையிலுள்ள அமெரிக்க டொலர் மற்றும் ரூபா பரிமாற்ற விகிதத்திற்கமைய வங்கியால் தீர்மானிக்கப்படுகின்றது. சந்தை விற்பனை விலைக்கு சில சதங்களை சேர்ப்பதன் மூலம் (உதாரணம் 10 இற்கு 25 சதங்கள்) விலைவீதம் நிர்ணயிக்கப்படுகின்றது. எனினும், விசேட விலைவீதங்களை பிரயோகித்து சிறந்த வாடிக்கையாளரிடமிருந்து உழைக்கப்படும் இலாபத்திற்கப்பால் ரூபா 268,122,303 நியாயப்படுத்த முடியாத இலாபமொன்றை வங்கி உழைத்திருந்தது. மேற்படி பார்வையில், வங்கியின் வியாபாரத்தின் 40 சதவீதத்திற்கு மேல் பங்களிப்பு செய்கின்ற வாடிக்கையாளராகவுள்ள இலங்கை அரசாங்கம் மற்றும் வங்கியின் உரிமையாளர் டொலர்களின் மில்லியன் தொகையான அதன் கொடுக்கல்வாங்கல்களிற்காக இலங்கை வங்கியிடமிருந்து சிறந்த விலைவீதத்தினை பெறவேண்டிய போதிலும் வங்கியின் மேற்படி கொடுக்கல்வாங்கல் இலாபமாக பொதுப் பணத்தின் முறையற்ற உள்ளீர்ப்பிற்கு மேலாக அதிக அக்கறையை ஏற்படுத்தும்.

## 4.5 திறைசேரிச் செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

**(அ) 2007 செப்தெம்பர் 28 இன் எஸ்எஸ்எஸ்எஸ்/04/2007 ஆம் இலக்க பொதுக் கடன் திணைக்கள சுற்றிக்கையிலுள்ள 2.2.2 ஆம் பந்தியின் ஏற்பாடுகளுடன் இணங்காமை**

வணிகர் நேரடி பங்குபற்றுனரொருவராக, ரூபா 58,686,089,500 பெறுமதியான 111 மீள்கொள்வனவு (ஆர்ஈபிஓ) கொடுக்கல்வாங்கல்களை இலங்கை மத்திய வங்கியால் விதிக்கப்பட்ட பிரமாணங்களிற்கு முரணாக அத்தகைய கொடுக்கல் வாங்கல்களிற்காக இணைக்கப்பட்ட பிணைகளின் சட்டரீதியான உரிமைத்துவத்தில் மாற்றத்தினை காட்டுவதற்கு லங்கா செக்குவர் ஓனர்சிப்பில் (Lanka Secure Ownership) உரிய நேரத்தில் சரியாக பதிவு செய்வதற்கு இலங்கை வங்கி தவறியிருந்தது. ஆர்ஈபிஓ கொடுக்கல்வாங்கல்கள் நடைமுறையில் மீளவும் பெறுமதியிடப்பட முடியாதிருந்த போதிலும் திறைசேரிப் பிரிவு ‘‘வணிகர் நேரடிப் பங்குபற்றுனர் தொடர்பில் பதியப்படாத கொடுக்கல்வாங்கல் கட்டணம்’’ இன் இடரினை வங்கி வெளிப்படுத்தி அதன் வாடிக்கையாளர்களிற்காக இந்த வசதியை வழங்கியிருந்தது. சாத்தியமான மேலதிகக் கட்டணம் ரூபா 586,860,895 தொகையாக (பதியப்படாத கொடுக்கல்வாங்கல் பெறுமதியின் 1 சதவீதம்) இருக்கலாம். லங்கா பாதுகாப்பில் அத்தகைய கொடுக்கல்வாங்கல்கள் பதியப்படாதிருந்ததிலிருந்து பாதுகாப்பற்ற பணச்சந்தைக் கொடுக்கல்வாங்கல்களாக பதியப்படாத காலப்பகுதியுடன் தொடர்புடைய எந்தக் கொடுக்கல்வாங்கல்களையும் கருத முடியும்.

**(ஆ) இலங்கை மத்திய வங்கிக்கு அறிக்கையிடப்பகின்ற அந்நியச் செலாவணி நிலைமை**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(i) தற்போது, வங்கி வணிகப் பிரிவுகளிடமிருந்து தொலைபேசியூடாக பெறப்பட்ட புள்ளிவிபரங்களை அடிப்படையாகக்கொண்டு அதனது அந்நியச் செலாவணி நாளிறுதி நிலைமையை கணிப்பிடுகின்றது. மத்திய வங்கி தேறிய திறந்த

நிலைமை எல்லையுடன் இணங்குவதற்காக நாளின் இறுதியிலுள்ள அத்தகைய நிலைமைகளை சர்வதேச நிதிய முகாமைத்துவ அலுவலகத்திற்கு இணைக்கப்பட்ட வணிகர்கள் மேவுகைசெய்கின்றனர். எவ்வாறாயினும், கணக்காய்வின் போது அடுத்த நாள் ஆரம்பத்தில் வங்கியானது அந்நியச் செலாவணிச் சொத்துக்கள் பொறுப்புக்களை சரிபார்ப்பதன் மூலம் வெளிநாட்டு நாணய ஐந்தொகையை அடிப்படையாகக்கொண்டு அதனது அந்நியச் செலாவணி வெளிப்படுத்தலை மீள்கணிப்பீடு செய்கின்றமை அவதானிக்கப்பட்டது. சில சந்தர்ப்பங்களில் அந்நியச் செலாவணிச் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் பொருத்தமின்மையானது முன்னைய நாளில் கைகளால் கணிப்பிடப்பட்ட புள்ளிவிபரங்களிலிருந்து விலகுகின்ற யூஎஸ் டொலர் மில்லியன்கள் மதிப்பைக் கொண்டுசெல்கின்றது. மாற்றுவழி இல்லாததிலிருந்து, வங்கியானது ஒன்றிணைக்கப்பட்ட விரிவான வங்கி முறைமையிலிருந்து (ஐசீபீஎஸ்) பெறப்பட்ட அந்நியச் செலாவணி நிலைமையை அங்கீகரிக்கின்றது. மேற்படி அவதானிப்பின் பிரகாரம், அந்நியச் செலாவணி வெளிப்படுத்துகை மீதான சந்தை இடரை குறைப்பதற்கும் அதற்கு ஒழுங்குமுறையான அறிக்கையிடல் நடைமுறையை பின்பற்றுவதற்கும் திறைசேரிப் பிரிவின் அந்நியச் செலாவணி வெளிப்படுத்துகையை முகாமை செய்வதற்காக பொறுப்பான அதிகாரமுள்ளவராக அதன் சிரேஷ்ட முகாமைத்துவம் அதன் உள்ளபடியான அந்நியச் செலாவணி நிலைமையை சரியாக இனங்கண்டு அங்கீகரித்து அறிக்கையிடத் தவறியிருந்தது. ஆகையால், வங்கி பாரிய சந்தை இடரையும் இணக்கமின்மை இடரையும் கொண்டுள்ளது.

மேலும், முகாமைத்துவம் மாதிரிக் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட பின்வரும் வேறுபாடுகளிற்கு விளக்கமளிக்கத் தவறியிருந்தது (யூஎஸ் டொலர்கள் மாத்திரம்).

| **திகதி** | **கைக் கணிப்பீட்டின் பிரகாரம் நாளிறுதி நிலைமை** | **ஐசீபீஎஸ் பிரகாரம் நாளிறுதி நிலைமை** | **வேறுபாடு** |
|---|---|---|---|
| ---------- | ---------------------- | ------------------------ | ----------------- |
| | **யூஎஸ் டொலர்** | **யூஎஸ் டொலர்** | **யூஎஸ் டொலர்** |
| 01/10/2015 | 2,597,324 | (144,767) | 2,452,557 |
| 02/10/2015 | (5,841,421) | 37,587 | (5,803,834) |
| 07/10/2015 | (2,830,285) | 585,004 | (2,245,281) |
| 08/10/2015 | (1,678,006) | 5,506,184 | 3,828,178 |
| 09/10/2015 | (1,261,640) | 3,926,988 | 2,665,348 |
| 12/10/2015 | (1,933,534) | 175,249 | (1,758,285) |
| 14/10/2015 | 1,041,757 | 15,664 | 1,026,093 |
| 16/10/2015 | (653,363) | (1,620,253) | (2,273,616) |
| 21/10/2015 | 2,438,469 | 3,639,165 | 6,077,634 |
| 22/10/2015 | 3,861,934 | 1,782,516 | 5,644,450 |
| 28/10/2015 | (370,387) | 1,605,609 | 1,235,222 |
| 29/10/2015 | (3,136,407) | 808,710 | (2,327,697) |
| 30/10/2015 | 46,506 | (2,574,982) | (2,528,476) |

(ii) அந்நியச் செலாவணி வெளிப்படுத்துகை கணிப்பீடு மற்றும் மத்திய வங்கிக்கு அறிக்கையிடல் என்பன உள்ளகக் கட்டுப்பாட்டை வலுப்படுத்துவதற்கான செயற்பாடுகளை கையாளுகின்ற சுயாதீனமான அலுவலரொருவரால் மேற்கொள்ளப்பட வேண்டும். எனினும், கையாளுதல் பிரிவிற்கு இணைக்கப்பட்டுள்ள உதவிக் கையாளுபவரினால் இந்தச் செயற்பாடு தற்போதும் தொடரப்படுகின்றது.

**(இ) 2002/05/02 ஆம் திகதிய மீள்கொள்வனவு மற்றும் மறு மீள்கொள்வனவு உடன்படிக்கையுடனான இணக்கமின்மை**

---

இலங்கை மத்திய வங்கியின் (சீபீஎஸ்எல்) மேற்படி வழிகாட்டலின் பிரகாரம், மீள்கொள்வனவிற்கெதிரான கடன்களிற்காக போதுமானளவு பாதுகாப்புப் பிணையங்கள் ஒதுக்கப்படவேண்டும். எனினும், பின்வரும் கொடுக்கல்வாங்கல்கள் மேற்படி வழிகாட்டலை மீறி கொடுக்கல்வாங்கல்களினதும் குறைப்புக்களினதும் சந்தைப் பெறுமதியை மேவுகைசெய்வதற்கு தேவையான பிணைத் தொகை ஒதுக்கப்பட்டிருக்கவில்லை.

| கையாளல் திகதி | கையாளல் இல. | எதிர்த் தரப்பினர் | மூலதனம்+ சென்மதி வட்டி | பிணைகளின் சந்தை விலை | குறைவான ஒதுக்கீடு |
|---|---|---|---|---|---|
| | | | ரூபா. | ரூபா. | ரூபா. |
| பெறப்படவில்லை | பெறப்படவில்லை | வீடமைப்பு அபிவிருத்தி நிதியம் | 61,064,178 | 56,803,521 | 4,260,657 |
| பெறப்படவில்லை | பெறப்படவில்லை | தபால் அலுவலக பாதுகாப்பு பிணைத் தொகை | 43,937,552 | 41,895,490 | 2,042,062 |

**(ஈ) 2015 பெப்ரவரி 27 இல் வழங்கப்பட்ட இலங்கை மத்திய வங்கி (சீபீஎஸ்எல்) திறைசேரிப் பிணைமுறி**

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(i) முதிர்ச்சிக் காலம் 30 ஆண்டுகளையுடைய திறைசேரிப் பிணைமுறிகள் தொடர்பில் 2015 பெப்ரவரி 27 இல் நடைபெற்ற திறைசேரிப் பிணைமுறி ஏலமிடுதலில் இலங்கை வங்கியின் (பீஓசீ) முதலாம்தர வணிகர் பிரிவினால் சமர்ப்பிக்கப்பட்ட கூறுவிலைகளின் விபரங்கள் கீழே விபரிக்கப்பட்டுள்ளன.

| | வாடிக்கையாளர் | வீதம் | முகப்பெறுமதி | இலங்கை மத்திய வங்கி ஏற்றுக்கொண்ட தொகை |
|---|---|---|---|---|
| | | (%) | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் |
| 1 | களுத்துறை போதி நம்பிக்கைப்பொறுப்பு | 9.35 | 8 | 8 |
| 2 | செலிங்கோ லைவ் காப்புறுதி | 10.25 | 500 | 500 |
| 3 | வரையறுக்கப்பட்ட பேபெற்சுவல் ரெசறீஸ் | 12.50 | 3,000 | 3,000 |

| | | | | |
|---|---|---|---|---|
| 4 | வரையறுக்கப்பட்ட பேபெற்சுவல் ரெசறீஸ் | 12.75 | 5,000 | திருப்தியற்றது |
| 5 | வரையறுக்கப்பட்ட பேபெற்சுவல் ரெசறீஸ் | 13.00 | 5,000 | திருப்தியற்றது |
| | **மொத்தம்** | | **13,508** | |

(ii) முதல் தடவையாக திறைசேரிப் பிணைமுறி ஏலமிடுதலில் அதாவது 2015 பெப்ரவரி 27 இல் நடைபெற்ற திறைசேரிப் பிணைமுறி ஏலமிடுதலில் வேறு முதலாம்தர வணிகரின் சார்பிலும் வரையறுக்கப்பட்ட பேபெற்சுவல் ரெசறீஸ் கம்பனியின் சார்பிலும் விலைமனுவைச் சமர்ப்பிப்பதற்கு இலங்கை வங்கி வேண்டப்பட்டிருந்தது

(iii) வங்கியின் திறைசேரிப் பிரிவு புகழ்பெற்ற வங்கிகள் மற்றும் முதலாம்தர வணிகர்களிடமிருந்து தனித்தனியாக நோ யுவர் கஸ்டமர் (கேவைசீ) ஐ பெற்றிருக்கவில்லை.

முன்னைய பொதுமுயற்சிகள் கணக்குக் குழுக் கூட்டங்களைத் தொடர்ந்து பின்வருவன கணக்காய்வுத் தெரிவுச் செவ்வையில் கண்டுபிடிக்கப்பட்டன.

- வங்கியின் கூட்டிணைப்புக் கிளை வரையறுக்கப்பட்ட பேபெற்சுவல் ரெசறீஸ் கம்பனியின் சார்பில் இரண்டு நடைமுறைக் கணக்குகளை பேணுகின்றதுடன் வங்கி பூரணத்துவத்தை சரிபார்ப்பது தொடர்பில் இந்தக் கணக்குகளிற்கான கேவைசீ படிவங்களைப் பெற்றிருக்கவில்லை.

- வங்கி 2014 மற்றும் 2015 இன் போது ரூபா 106 பில்லியன் தொகையான மறு மீள்கொள்வனவுக் கொடுக்கல்வாங்கலிற்குள் நுழைந்திருந்ததுடன் இந்தக் கொடுக்கல்வாங்கல்களை மேவுகைசெய்வதற்கு இந்தக் கம்பனியுடன் ‘‘மாஸ்டர் மீள்கொள்வனவு உடன்படிக்கை’’ ஐ வங்கி கைச்சாத்திட்டிருந்ததை இது மேலும் வெளிப்படுத்தியது.

(iv) இலங்கை வங்கி திறைசேரிச் செயற்பாடுகள் கையேட்டின் 6 ஆம் இலக்கப் பிரிவின் பிரகாரம், முதலாம்தர வணிகர் பிரிவானது நிதிகள், கையொப்பங்கள் மற்றும் ஏனைய முக்கிய தரவு என்பவற்றினை சரிபார்க்காமல் விண்ணப்பங்களை செயன்முறைப்படுத்தக்கூடாது. அவர்கள் விசேடமாக காசுக் கொடுக்கல்வாங்கல்களில் கேவைசீ வழிகாட்டலையும் பின்பற்ற வேண்டும். ஆனால் மேற்படி அறிவுறுத்தல்களுக்கு முரணாக முதலாம்தர வணிகர் பிரிவு வெற்றிச் சம்பவம் மீதான விலைமனுக்களை தீர்ப்பனவு செய்வதற்கு போதுமானளவு நிதியை வரையறுக்கப்பட்ட பேபெற்சுவல் ரெசரீஸ் கம்பனி கொண்டிருக்காததை அறிந்திருந்தது.

முன்னைய பொதுமுயற்சிகள் கணக்குக் குழுக் கூட்டங்களின் பின்னரான விபரமான கணக்காய்வுப் பரிசோதனைகள் பின்வருவனவற்றை வெளிப்படுத்தியிருந்தது.

இலங்கை வங்கி வேறு வங்கிகள், பிரதான புகழ்பெற்ற கூட்டுத்தாபனங்கள் மற்றும் முதலாம்தர வணிகர்களின் கணக்கு மீதான ஆரம்ப விலைமனுவிற்காக எழுத்துமூல நடைமுறையொன்றை கொண்டிருக்கவில்லை. இந்த வகையில் விலைமனு செய்தலில் பின்பற்றப்பட வேண்டிய நடைமுறையானது ஆரம்ப ஏலமிடல் விலைமனு, அரசாங்க

பாதுகாப்புப் பிணைக்கெதிரான சுவப் கொடுக்கல்வாங்கல்கள் மற்றும் எதிரான மீள்கொள்வனவு/ அரசாங்க பாதுகாப்புப் பிணைமுறியு ஊடான முதலீடு என்பவற்றிற்கான செயன்முறைத் தொகுப்பின் கீழ் 2015 பெப்ரவரி 27 இல் நடைபெற்ற சர்ச்சைத்தன்மையான பிணைமுறி வழங்கலின் பின்னர் 2015 செப்தெம்பர் 07 ஆம் திகதியிடப்பட்ட சபை தீர்மானத்தின் மூலம் அறிமுகப்படுத்தப்பட்டது.

நேரடி ஆரம்ப கேள்விதாரர்களுக்கான நிதி சரிபார்த்தல் முறைமை 2015 செப்தெம்பர் 07 இல் மேற்குறிப்பிட்ட சபை உள்ளகக்குறிப்பின் 3 ஆம் பிரிவில் மாத்திரம் அறிமுகப்படுத்தப்பட்டிருந்தமை மேலும் அவதானிக்கப்பட்டது.

(v) இரண்டாம் கொடுக்கல்வாங்கல் சுவப் கொடுக்கல்வாங்கல்களாக இருந்ததுடன் அங்கு இலங்கை வங்கி 2015 மார்ச் 2 இல் பேபெற்சுவல் ரெசறீஸிடமிருந்து ரூபா 2.3 பில்லியன் மதிப்புடைய பிணைமுறிகள் கொள்வனவு செய்திருந்ததுடன் 2015 மார்ச் 6 இல் அதே பிணைமுறியை முறையே 12.50 சதவீதம் மற்றும் 12.4950 சதவீத விலைவீதத்தில் விற்பனை செய்திருந்தது. வரையறுக்கப்பட்ட பேபெற்சுவல் ரெசறீஸ் 2015 மார்ச் 2 இல் பி.ப. 3.26 இல் ரூபா 1 பில்லியன் மதிப்புடைய பிணைமுறிகளை முதலில் தீர்ப்பனவுசெய்திருந்ததென குழு மேலும் அவதானித்திருந்தது. மத்திய வங்கியின் பிரகாரம், வரையறுக்கப்பட்ட பேபெற்சுவல் ரெசறீஸ் ஏலத்திலிருந்து இன்னொரு 2 பில்லியன் மதிப்புடைய பிணைமுறிகளை பெற்றிருந்தது. ஆகையால், அவர்கள் எஸ்டபிள்யூஏபி அடிப்படையில் இணங்கப்பட்ட கொடுக்கல்வாங்கலை தீர்ப்பதற்கு போதிய பாதுகாப்புப் பிணையங்களை கொண்டிருந்தனர். (இலங்கை வங்கிக்கு பிணைமுறியை விற்பனைசெய்வதற்கு) அதன் பின்னர், அவர்கள் அதே தினத்தில் இலங்கை வங்கிக்கு ரூபா 2 பில்லியன் நிலுவை மீதியை (ஏலத்தினூடாக இலங்கை வங்கியிடமிருந்து கொள்வனவுசெய்யப்பட்டது) தீர்வுசெய்திருந்தனர்.

பின்னர், சுவப் கொடுக்கல்வாங்கலை முடிவுசெய்து இலங்கை வங்கியிடமிருந்து ரூபா 2.3 பில்லியன் மதிப்புடைய பிணைமுறியை வரையறுக்கப்பட்ட பேபெற்சுவல் ரெசறீஸ் கம்பனி கொள்வனவு செய்திருந்தது. இலங்கை வங்கி இந்தக் கொடுக்கல்வாங்கலிலிருந்து ரூபா 3.9 மில்லியன் இலாபத்தை ஈட்டியிருந்தது.

(vi) 2015 பெப்ரவரி 27 இல் நடைபெற்ற இலங்கை மத்திய வங்கி விலைமனு ஏலமிடுதலிற்காக மு.ப. 11.10 வரை நீடிக்கப்பட்ட நேரத்திற்கான ஆவணச்சான்று எதுவும் இருக்கவில்லை. இது தொலைபேசி தொடர்பாடல் மூலம் இணங்கப்பட்டிருந்தது. மத்திய வங்கி விலைமனு அச்சிடல் பிரதியின் பிரகாரம், ஏலமிடுதல் நேரம் மு.ப. 11.10 வரை நீடிக்கப்பட்டிருந்தது.

(vii) முதலாம்தர வணிகரின் (வரையறுக்கப்பட்ட பேபெற்சுவல் ரெசறீஸ்) பிரகாரம், அவர்கள் காப்புறுதிக் கம்பனியின் சார்பில் விலைமனுச் செய்திருந்தனர். எவ்வாறாயினும், இந்த கூற்றினை நிரூபிப்பதற்கு ஆவணச் சான்றை அவர்களால் வழங்க முடியாதிருந்தது. வரையறுக்கப்பட்ட பேபெற்சுவல் ரெசறீஸ் கம்பனியால் கொள்வனவு செய்யப்பட்டதென உறுதிப்படுத்தியதாலும் இந்த பிணைமுறிகள் இரண்டாம் சந்தையிலுள்ள காப்புறுதிக் கம்பனிக்கு விற்பனை செய்யப்பட்டிருக்கவில்லை.

**4.6 செயற்பாட்டுச் செயற்திறனின்மைகள்**

-----------------------------------------------------------

**கரைகடந்த கிளைகளின் செயற்பாடுகள்**

-----------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

**(அ) வரையறுக்கப்பட்ட இலங்கை வங்கி (யூகே)**

வரையறுக்கப்பட்ட இலங்கை வங்கி (யூகே) வங்கியின் துணைக்கம்பனியை முழுமையாக சொந்தமாக்கியுள்ளதுடன் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு முதலீட்டுக் கிரயம் ரூபா 2,684 மில்லியன் ஆக இருந்தது. எனினும், துணைக்கம்பனியின் இலாபத்தன்மை பின்வருமாறு தொடர்ச்சியாக வீழ்ச்சியடைந்திருந்தது.

| காலம் | வரிக்குப் பின்னரான தேறிய இலாபம்/ (நட்டம்) | வரிக்குப் பின்னரான தேறிய இலாபம்/ (நட்டம்) |
|---|---|---|
| | தொகை ஜீபீபியில் | தொகை ரூபாவில் |
| 2010.12.31 இல் முடிவடைந்த 8 மாதங்கள் காலப்பகுதி | (89,272) | (15,373,531) |
| 2011.12.31 அல் முடிவடைந்த ஆண்டு | (414,108) | (73,541,440) |
| 2012.12.31 அல் முடிவடைந்த ஆண்டு | (221,000) | (45,459,700) |
| 2013.12.31 அல் முடிவடைந்த ஆண்டு | (422,000) | (91,092,920) |
| 2014.12.31 அல் முடிவடைந்த ஆண்டு | (596,000) | (122,031,000) |
| 2015.12.31 அல் முடிவடைந்த ஆண்டு | (312,293) | (66,697,089) |

நட்டங்களின் அதிகரிப்புக் காரணமாக, 2010 இல் துணைக்கம்பனியானது அதன் ஆரம்பத்திலிருந்து பங்குலாபங்களைச் செலுத்தும் நிலையிலிருக்கவில்லை.

**(ஆ) வங்கியின் சீசெல்ஸ் கிளை**

**வைப்புக்கள்**

2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சீசெல்ஸ் கிளையில் பேணப்பட்ட வாடிக்கையாளர் கணக்குகளின் மொத்த எண்ணிக்கை 811 ஆக இருந்தது. மொத்தக் கணக்குகளில் 176 கணக்குகள் பூச்சிய மீதியில் பேணப்பட்டதுடன் இது கணக்குகளின் மொத்த எண்ணிக்கையில் 22 சதவீதத்தை பிரதிபலிக்கின்றது. விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| கணக்கு விபரம் | மொத்தக் கணக்குகளின் எண்ணிக்கை | பூச்சிய மீதிக் கணக்குகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| சேமிப்புக் கணக்குகள் | 598 | 141 |
| நடைமுறைக் கணக்குகள் | 210 | 35 |
| நிலையான வைப்புக்கள் | 03 | - |
| மொத்தம் | **811** | **176** |

**(i) வழங்கப்பட்ட நிதிகளின் மூலதனக் கிரயம்**

வங்கி 6 மாதங்கள் லண்டன் வங்கிகளுக்கிடையே அளிக்கப்பட்ட விலைவீதம் (எல்ஐபீஓஆர்) கூட்டு 4 சதவீதம் விலைவீதத்தில் 2015 செப்தெம்பர் 25 இல் சீசெல்ஸ் கிளைக்கு கடன் வசதியாக ஐ.அ.டொலர் 1.5 மில்லியனை வழங்கியிருந்தது. எனினும், அதே திகதியில் வங்கியின் யூஎஸ் டொலர்களின் நிறையளிக்கப்பட்ட சராசரி மூலதனக் கிரயம் 4.83 சதவீதமாக இருந்ததென மதிப்பிடப்பட்டது.

வங்கித் தலைவரின் பிரகாரம், ''இது வணிக அடிப்படையிலான வணிகக் கடனாக இல்லாததுடன் சீசெல்ஸ் கிளை 8–12 சதவீத்திற்கிடைப்பட்ட விலைவீதத்தில் கடன் வழங்கியிருந்ததுடன் வங்கி அந்தக் கிளைக்கான யூஎஸ்டி நிதியங்கள் மீது ஒட்டுமொத்த வருமானத்தை உழைத்திருந்தது.''

**(ii) வாடிக்கையாளரிடமிருந்தான வைப்புக்கள்**

வைப்புக்களின் மீளாய்வின் போது, 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிளையின் மொத்த வைப்புக்களின் 73 சதவீதம் பத்து பிரதான வைப்பு வாடிக்கையாளர்கள் தொகையென அவதானிக்கப்பட்டது. கிளையானது மிகவும் வரையறுக்கப்பட்ட வைப்பாளர்களில் பெரிதும் தங்கியுள்ளதை சுட்டிக்காட்டுகின்றதுடன் உயர் திரவத்தன்மை இடரை வெளிப்படுத்துகின்றது. ஆகையால், இந்த நிலைமை கிளையின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவை பாதகமாக பாதிக்கும் என அவதானிக்கப்பட்டது.

## 5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் வங்கியின் தலைவரிற்கு எனது விபரமான அறிக்கைகளை வழங்கியதன் மூலம் வங்கியின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பாக விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| | | |
|---|---|---|
| (அ) | கடன் நிர்வாகம் | - செயற்பாடற்ற முற்பண விகிதம்<br>- உயர் செயற்பாடற்ற வாடிக்கையாளர்கள் மற்றும் கிளைகள்<br>- பதிவளிக்கப்பட்ட கடன்கள் |
| (ஆ) | முதலாம்தர வணிகர் பிரிவு | - இணக்கமின்மை<br>- அந்நியச்செலாவணி நிலைமைகள் |
| (இ) | வெளிநாட்டுக் கிளை | - வெளிநாட்டுக் கிளைகள் நட்டத்தை மேற்கொள்ளுதல்<br>- குறைந்த வைப்பாளர்களில் தங்கியிருத்தல் |